முருகப்பெருமான் துணை

**மகான் ஐம்புமகரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.11.2022,** திங்கட்கிழமை

1. ஞான ஒளி கொண்ட அரங்கா
ஞான வெளிகண்ட தேசிகா
தான தரும வழிகாட்டி அருளும்
தவசியே ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது தேள்திங்கள்
வரங்களென பஞ்சதிகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 05 ம் நாள் 21.11.2022, திங்கட்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை ஜம்புமகரிஷி யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
ஆசிதந்து கரும வினைதனை
அகற்றிக் காக்கும் மகா ஞானியாக
4. ஞானியாக வந்த அரங்கன்
ஞானவழிகள் மக்களிடையே
ஞானமாகப் பரவினால் போதும்
ஞாலமதில் எங்கும் ஞானபலம்
5. பலமாக பரவெளி சக்தியாக
பாதுகாப்பு மிகுந்த வண்ணம்
வளமான பூமியாக உலகம்
வளர்ச்சிநிலைகளை கண்டடையும்
6. அடையவே மக்களிடை மாற்றம்
ஆன்மீக அரசியல் களமாக
தடையற உலகை மாற்றும்
தவபலம் தருமபலம் கொண்ட
7. கொண்ட ஞானப்படைகளாக
குறைவிலா மக்கள் சமூகம்
தொண்டு வழி ஆற்றலாகி
தேசிகனால் தேற்றம் காண்கும்
8. காண்கவே உலகம் எங்கிலும்
கந்தவேலன் ஆசிதனை பெற்ற
உண்மை நிறைந்த மக்களால்
உலகம் காக்கும் ஞான ஆட்சி
9. ஆட்சி கடுதி அமையும்
அரங்கனாலும் ஆசிபெற்ற
மாட்சிமைமிக்க அரங்கன் சீடர்களாலும்
மாற்றம் கடுதி நிகழும்

10. நிகழவே நீதி நெறி குன்றா
நிலைத்தன்மை வரமருளும்
வகையான வல்லமையான குரு
வடிவேலாக வந்த ஞானகுரு

11. ஞானகுரு கலிவென்ற சற்குரு
ஞானதேசிகன் திருவடி பணிய
ஞானயுகமாக ஞானலோகமாக
நல்மாற்றம் கண்டு ஞான ஆட்சி மலரும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—